செய்தி வெளியீடு எண்: 199 நாள் : 22.03.2013

# பத்திரிக்கை செய்தி

## இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக 2– ஆம் தவணை போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 23–3–2013 (சனிக்கிழமை)

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல்ஸ் போலியோ முகாம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதால் போலியோ நோய் இல்லாத நிலை உருவாகி உள்ளது. இருந்த போதிலும், வெளி மாநிலங்களிலிருந்து, தமிழ்நாட்டிற்கு வேலை தேடி வருவோர் குழந்தைகள் மூலம் போலியோ (வைரஸ்) நோய் பரவும் அபாயம் உள்ளது. இவ்வாறு அடிக்கடி இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு சரியான தவணைகளில் தடுப்பு மருந்து கிடைப்பதில்லை.

சென்ற மாதம் 22–12–2012 அன்று இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கு போலியோ நோய்க்கு எதிரான தடுப்பு சக்தியை உருவாக்குவதற்காக, போலியோ சொட்டு மருந்து முகாம் பிரத்தியேகமாக நடத்தப்பட்டது. இந்த போலியோ சிறப்பு முகாமில் அரசுத்துறையை சார்ந்தவர்கள் மட்டுமில்லாமல் தன்னார்வ தொண்டு நிறுவனம் மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனலை சார்ந்தவர்களும் சேர்ந்து பணியாற்றினார்கள். இந்த முகாம் வாயிலாக 35,491 ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் பயன் அடைந்தனர்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்கான பட்டியலில் புதிதாக வந்தவர்களும் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 23–3–2013 அன்று இடம் பெயர்ந்து வாழ்வோரின் குழந்தைகளுக்காக 2ஆம் தவணை போலியோ சொட்டு மருந்து அளிக்க கீழ்கண்ட பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1. கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடம், மேம்பாலம், தொழிற்சாலை, நெடுஞ்சாலை, இரயில்வே பணிகள்.
2. செங்கற்சூளை.
3. நரிக்குறவர் தங்குமிடம்.
4. வேளாண் தொழிலாளர் வசிப்பிடம்.
5. மீன்பிடித் தொழிலுக்காக இடம் பெயர்ந்து வாழும் மீனவ பகுதி.
6. சாலையோர குடியிருப்புகள்.
7. வாத்து மற்றும் ஆடு மேய்ப்பவர்.
8. இலங்கை அகதிகள்.

ஏறக்குறைய 5770 இடம் பெயர்ந்து வாழ்வோர் பகுதிகளில் 23–3–2013 (சனிக்கிழமை) அன்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். சுமார் 35,000 ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து

துறை இயக்குநருக்காக, சென்னை–6.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**